**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI**

**M.C.O.P. No.1730/2021 and MCOP No.1731/2021**

**P.W.1**

Deposition of Witness for the Petitioner / Respondent Solemnly affirmed by of this Court on **04.10.2024** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | |
|---|---|
| Name மாரிக்கண்ணன் | Father Name : மகாலிங்கம் |
| Village : | Taluk : |
| Caste : | Religion : |
| Calling : | Age : |

**<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை :</u>**

நான் MCOP No.1730/2021ல் மனுதாரர் ஆவேன். வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.1** ஆகும். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.2** ஆகும். குற்ற இறுதி அறிக்கை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.3** ஆகும். மருத்துவ புறநோயாளி சீட்டு அசல் **ம.சா.ஆ.4** ஆகும். TN 64 F 5641 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.5** ஆகும். TN 58 AE 1255 நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.6** ஆகும். என்னுடைய சம்பள சான்றிதழ்

அசல் **ம.சா.ஆ.7** ஆகும். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் **ம.சா.ஆ.8** ஆகும். எனது வங்கி கணக்கு புத்தக நகல் **ம.சா.ஆ.9** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

இந்த விபத்து நான்கு வழிச்சாலையில் நடந்தது என்றால் சரிதான். விபத்து குறித்து போலிசார் வரைந்த மாதிரி வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மாதிரி வரைபடத்தை பார்த்தால் என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து நடைபெற்றது என்பது தெரியவரும் என்பதால், அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் நான்குவழிச்சாலையில் சுமார் 40 கி.மீ வேகத்தில் சென்றேன். நான் 1ம் எதிர்மனுதாரர் வந்த வாகனத்தை கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தெற்கிலிருந்து வடக்காக சென்றேன், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. இந்த விபத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்கு என்ன ஆனது என்ற விவரம் எனக்கு தெரியாது. இறந்து போன குபேந்திரன் எனது மாமா ஆவார். நானும் குபேந்திரனும் இருசக்கர வாகனத்தில் விருதுநகர் – திண்டுக்கல் ரோட்டில் மொட்டமலையில் உள்ள மரக்கடையிலிருந்து சமயநல்லூர் நோக்கி சென்றுகொண்டிருந்தேன். இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு தான் முழு காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் மற்றும் அதன் காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. எனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டுமென்றால் மேற்படி இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் தான் கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எனக்கு விபத்தில் இடது காலில் ஏற்பட்ட காயத்திற்கு நான் மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் கட்டு போட்டுள்ளேளன். நான் உள்நோயாளியாக அங்கு சேர்ந்து சிகிச்சை பெறவில்லை. எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் எனக்கு சிறு காயங்கள் என்றால் சரியல்ல. என்னுடைய ஓட்டுனர் உரிமத்தின் நகலை நான் தாக்கல் செய்யவில்லை. நான் மனுவில் கோரியுள்ள தொகை மிகவும் அதிகம் என்றும், எனவே அதை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 சம்பள சான்றிதழ் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றும், அதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மையல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.